# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3




தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

http://win10.io


| | | | |
|---|---|---|---|
| 35. | முனைவர் தமிழ்செல்வி, ப. | இயேசுகாவியம்-மலைப்பொழிவில் மனித மதிப்பீடுகள் | 125 |
| 36. | செல்வி தாட்சாயனி, ம. | இயேசுகாவியம் காட்டும் இறைமகனின் அன்பு | 129 |
| 37. | முனைவர். நிர்மலா செல்வி, வே. | இயேசுகாவியம் சுட்டும் அன்பு | 132 |
| 38. | முனைவர் பாப்பா, மா. | இயேசு காவியத்தில் மனித மாண்புகள் | 136 |
| 39. | முனைவர் சகோ. மங்கள சுந்தரி, க. | எஸ்தர் காவியத்தில் மானுட மதிப்பீடுகள் | 139 |
| 40. | முனைவர் ரில்பர்ட் ஜெனார்த்தனன், வ. | இயேசு காவியத்தில் உவமைகள் ஏற்படுத்தும் கருத்தியல் | 142 |
| 41. | முனைவர் ரேணுகா, நா. | இறவாக் காவியத்தில் மனித மாண்புகள் | 145 |
| 42. | திருமதி ரேவதி, க. | உலகிற்கு வழிகாட்டும் உவமைகள் | 149 |
| 43. | முனைவர் லதா, தா. | அன்னைதெரசா நிகழ்வுகளில் மனிதம் | 152 |
| 44. | செல்வி லட்சுமி பிரியா, லோ. ரா. | சிலுவையின் பாடுகள் வழி "மனிதம்" | 155 |
| 45. | திருமதி ஜான்சி, பா. | கண்ணதாசனின் இயேசுகாவியத்தில் வாழ்வியல் நெறிகள் | 159 |
| 46. | ஜெயசாந்தி, ஜெ. | இயேசு காவியத்தில் மனித மதிப்புகள் | 163 |
| 47. | ஜெயபூர்ணிமா, வே. | சர்வசமய சமரசக் கீர்த்தனையில் முக்தி | 167 |
| | | **பிற** | |
| 48. | முனைவர் பணி. அன்பரசு, ம., சே.ச. | இஸ்லாமிய கிறித்தவச் சமயங்கள் முன்வைக்கும் அறச்சினம் குறித்த பார்வைகள் | 171 |
| 49. | திரு ஆனந்த், பி. | கிறித்தவ வழிபாட்டுப் பாடல்களில் அன்பு | 174 |
| 50. | முனைவர் அருள்தந்தை இருதயராஜ், சே.ச. | ஸ்டெர்லைட் போராட்டத்தில் மனித உரிமை மீறல்கள்; நம்வாழ்வு இதழின் பதிவுகளும் பார்வைகளும் | 177 |
| 51. | திரு. காளிஸ்பிரபு, க. | தமிழ் இலக்கண மரபில் தொன்னூல் விளக்கம் | 182 |
| 52. | திருமதி சத்தியப்பிரியா, பொ. | கிறித்துவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 185 |
| 53. | திரு. பால்ராஜ், பி. | கிறித்தவம் வெளிப்படுத்தும் அன்புநெறி | 188 |
| 54. | முனைவர் பூங்கொடி, சு.ர. | வில்லுப்பாட்டில் பெண்களின் மதிப்பீடுகள் | 191 |
| 55. | முனைவர் மோட்ச ஆனந்தன், ம. | கிறித்துவச் சிந்தனையில் அயோத்திதாசப் பண்டிதரும் தந்தை பெரியாரும். | 194 |
| 56. | Dr. V. Suganya | MARIAN VIRTUES IN CONTEMPORARY WORLD | 196 |


Scanned by CamScanner

http://win10.io

# வில்லுப்பாட்டில் பெண்களின் மதிப்பீடுகள் (விவிலியப் பெண்கள் எஸ்தர், ரூத்)

முனைவர் சு.ர.பூங்கொடி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
பாத்திமாக் கல்லூரி, மதுரை-18

பெண் என்பவள் கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும். அவனுக்குச் சமமாக பேசக்கூடாது. அவனுக்கு அறிவுரை கூறக்கூடாது. அழகாக இருக்க வேண்டும். பணிவாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பெண் சார்ந்த மதிப்பீடுகளே நிலவிவரும் சூழ்நிலையில் விவிலியத்தில் அழகு, பணிவு ஆகியவற்றுடன் இருக்கக்கூடியப் பெண்கள் எஸ்தர், ரூத் அவர்களுடைய அறிவாற்றலாலும், பக்தி திறத்தாலும் சில நன்மைகளைப் பெற்றதை முனைவர் க.கமலா ஏஞ்சல் பிசைட் எழுதிய "வரலாற்றுப் பெண்கள் எஸ்தர், ரூத்தின் வில்லுப்பாட்டு புத்தகத்தில் காண முடிகிறது. பெண்களைப் பற்றிய மற்றவர்களின் மதிப்பீடுகளையும், அம்மதிப்பீடுகளைத் தன் அறிவால் மாற்றியமைத்ததையும் பற்றி இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

**பெண்ணின் அழகுக்கு முதன்மை தரல்**

ஒரு ஆண் தனக்குரிய பெண் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவனுடைய பார்வையில்
திருமணத் தகுதிகள் குறிக்கப்படுகின்றன. எந்தப் பெண்ணும் தன் வாழ்க்கைத் துணைவனாக அமையும்
ஆண் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்த முடியாது. பெண்ணின் அறிவு, சிந்தனைத்திறம்,
உடலாற்றல் ஆகியவைகளைப் புறந்தள்ளி விட்டு 'அழகு' மிகவும் முதன்மையாகப் பேசப்படுகிறது.

**"பெண்கள் என்பவர்கள் ஆண்களது உடல் இன்பத்திற்காகவே படைக்கப்பட்டிருப்பவர்கள் திருமணச் சந்தையில் ஒரு பெண்ணுக்குக் கிடைக்கப்பெறும் கணவனைத் தீர்மானிப்பதில் அவளது உடலழகு முக்கியப்பங்கு வகிக்கின்றது எனும் கருத்து அவள் மனத்தில் அறிவுறுத்தப்படுகின்றது."** *(ச.முத்துச்சிதம்பரம் தமிழக நாட்டுப்புறவியலில் **பெண்கள்** ப. 208)*

ருத்தின் மாமியார், தன்னுடைய மகனுக்குப் பெண் பார்க்கும் போது

***"நெட்டப்பெண் வேண்டாம்***
***குட்டப்பெண் வேண்டாம்***
***குண்டுப்பெண் வேண்டாம்***
***ஒல்லிப் பெண் வேண்டாம்"***

என்று கூறுவதிலிருந்து பெண்களுக்கு அறிவை விட சாமர்த்தியத்தைவிட 'அழகு' முதன்மையாகப்
பேசப்படுகிறது. பெண்ணின் உடல் வருணனைக்குரிய பொருளாகப் பேசப்பட்டடிருப்பது புலனாகிறது.

**திருமணத்தின் போது பெண்ணிடம் வரதட்சணையை எதிர்பார்த்தல்**

சமுதாய அமைப்பில் மணம் சேப்படும்போது வரதட்சணை என்ற பெயரில் பெண் வீட்டாரிடமிருந்து
பொருளாகவும் பணமாகவும் வாங்கப்படுகிறது. இவ்வழக்கம் இனம், சமயம் வேறுபாடின்றி எங்கும் பரவியுள்ளது.

**"ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே திருமணம். ஆனால் அதில் பெண்கள் மட்டுமே கப்பம் கட்ட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே பெண்ணின் திருமணத்திற்கு வரதட்சணை ஒரு முட்டுக்கட்டையாய் அமைகின்றது. முற்காலத்தில் திருமணத்தின் போது பெற்றோர் மகளுக்கு அன்பு காரணமாகப் பணமோ நகையோ கொடுத்தனர். அதுவே நாளாவட்டத்தில் மரபாக மாறியதோடு மதிப்பாகவும் கருதப்பட்டது. பின்னர் நடுத்தர பாட்டாளி வர்க்கத்தினருக்குப் பாதகமாக அமைந்தது"** *(S.L. Hooja Dowry System in India P.Nil)*

என்னும் ஹூஜா அவர்களின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. அகாஸ்வேரு ராஜாவுக்குப்
பெண் பார்க்க அவரது தாயார் மந்திரியிடம் கூறுகிறார்.

***'ராஜாவுக்குப் பொருத்தமான***
***ராஜ குடும்பப் பெண் வேணும்***



Scanned by CamScanner